## தமிழ் நாடு சட்ட மன்றம்

---

### வியாழக்கிழமை, 1973 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்

*Separate Flag to be flown on the Vehicles of High Court Judges.*

@ * 286 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether any separate flag is permitted to be flown on the vehicles of High Court Judges ; and

(b) if so, the details thereof ?

#### உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஊர்திகளில் பறக்கவிடுவதற்காக தனிக்கொடி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஊர்திகளில் பறக்க விடுவதற்காக, தனிக்கொடி எதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இதற்கு அனுமதி கேட்டு அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பம் வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைமை நீதிபதி தனிக் கொடி ஒன்று போட்டுக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு கருத்து

---

@ 28—3—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

தெரிவிக்கப்பட்டது. இப்போது தலைமை நீதிபதி அவருடைய காரிலே தேசியக் கொடியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற அளவிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாவட்ட அளவிலே உள்ள நீதிபதிகள் சிலர் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் உறுப்பினர் களாகவும், நிர்வாகிகளாகவும் இருந்து, அதன் காரணமாக தேர்தலில் ஈடுபட்டு விருப்பு வெறுப்புடன் செயல்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா? அது போன்றவர்கள் இந்த ஸ்தாபனங்களில் தொடர்பு கொள்வதைப் பொறுத்து ஒரு நடைமுறை விதி ஏற்படுத்துவதைப் பற்றி அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசு அறியாத காரணத்தினால் தான், அவர்கள் சொன்னதன்பேரில் விவரங்கள் இப்போது அறிய விரும்புகிறது.

*Participants in the Anti-Hindi Agitation*

@ * 287Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether there is any proposal to grant pension to those who were imprisoned for taking part in the Anti-Hindi Agitation and to those who laid down their lives in the agitation; and

(b) if so, the details thereof?

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களுக்கும், உயிர் நீத்த தியாகிகளுக்கும் மான்யம் அளிக்கும் திட்டம் ஏதாவது உண்டா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 1965 ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீக்குளித்த ஒன்பது பேரைச் சார்ந்திருந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 1—4—1972 முதல் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 மானியம் கொடுக்க

---

@ 28—3—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.